# சங்க புற இலக்கியத்தில் விருந்தோம்பல்

*முனைவர் மு. கலாகோபி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சங்கரன்கோவில்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5053

### முன்னுரை

"உண்டி கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே" எனும் திருமூலர் வாக்கிற்கிணங்க, தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடு. இல்லற மகளிர்க்கு இன்றியமையாத மாண்புகளுள் விருந்தோம்பலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனையே தொல்காப்பியரும்,

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"**

**(தொல் - 1098)**

எனக் கூறுகின்றார். இதனையே சங்க இலக்கியங்களும் மனித நேயப் பண்புகளில் விருந்தோம்பலே சிறந்த பண்பாடாகப் பேசி நிற்கின்றது.

### மன்னர்களின் அற விருந்தோம்பல்

விருந்து என்றாலே புதுமை என்று பொருள், "பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பது மனித நேயத்தின் முதற் படியாகும். நம் சங்கச் சான்றோர் விருந்தோம்பலைப் பெரும்பேறாகவும், கடமையாகவும் கருதி உள்ளனர் என்பதை,

**"சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும்**
**இருங் கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்**
**மற்றும் மற்றும் வினவுவதும், தெற்றென,**
**பசிபிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே"**

**(புறம் - 173)**

எனும் புறநானூற்றுப் பாடல் பசியை நோய் என்றும், உணவை மருந்து என்றும் வழங்குவர். உணவை அளிக்கும் பண்ணனைப் "பசிப்பிணி மருத்துவன்" என்று கிள்ளிவளவன் பாடியது பண்ணனின் விருந்தோம்பல் பண்பைப் புலப்படுத்துகின்றது.

**"நெருநை வந்த விருந்தின்று மற்றுத்தன்**
**இரும் புடைப் பழிவான வைத்தனன், இன்று இக்**
**கருங் கோட்டுச் சீறயாழ் பணையம்"** **(புறம் 316)**

எனும் பாடலின் மூலம் தன்னை நாடி வரும் விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தன் வாட்படையையும், சிறிய யாழினையும் பணையமாக வைத்தான் என்று வெண்ணாகனார் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும் ஔவையார் அதிய மானின் விருந்தோம்பல் பண்பை,

**"வெள்ளி வெண் கலந்து ஊட்டடல்"**

**(புறம் - 390)**

எனும் வரிகளின் மூலம் வெள்ளி வெண்கலம் போன்ற பாத்திரத்தில் உணவு படைத்து சுற்றத்தார்களின் பசித்துன்பத்தைப் போக்கினான் என்று புகழ்ந்து பாடியுள்ளார். பொருநாற்றுப்படையில் பரிசில் வேண்டிச் சென்ற கூத்தன் ஒருவனுக்கு தணலில் வேக வைக்கப்பட்ட உணவை கரிகால் வளவன் வழங்கி உபசரித்த பாடல் கருத்து உள்ளது.

**"பதனறிந்து**
**துராஅய் துற்றி துருவையம் புழுக்கின்**
**பரைஅரை வேவை பருகெனத் தண்டிக்**
**காழிற் சுட்ட கோழூன் கொழுங்கறை**
**ஊழின் ஊழின்**
**அவையவை முனிகுவ மெனினே"**

என்ற பாடல் வரிகள் மூலமாக அறிய முடிகிறது. அறுகம்புல்லைத் தின்று கொழுத்த செம்மறியாட்டின் இறைச்சியில் சமைக்கப்பட்ட உணவை இரும்புக் கம்பிகளில் குத்திப் பக்குவமாக சமைத்துப் பரிமாற, அந்தச் சுவையான உணவினை ஆசையுடன் சுட்டோடு வாயிலிட்டு, அதன் வெம்மை தாளாமல் வாயில் இடப்புறமும் வலப்புறமாக மாற்றி மாற்றிச் சுவைத்துப் போதும் போதுமென மறுக்குமளவுக்குத் தான் உணவு உண்டதாக சொல்கிறான் பரிசில் பெறச் சென்ற கூத்தன்.

பல்வேறு வடிவங்களில் சமைக்கப்பட்ட பல்வேறு தின்பண்டங்களையும் கொண்டு வந்து கொடுத்து அவற்றை முழவின் இசைக்கு விரலியர் நடனமாட அதனை ரசித்தவாறே உண்ணவைத்து மகிழ்ச்சிப்படுத்துகிறான் மன்னன். மேலும் சோறும் உண்ணவேண்டுமென்று பாணனை வற்புறுத்தி, முனைமுறியாத முல்லை மொட்டினைப் போன்ற விரலளவு நீளமான அரிசிச் சோற்றைப், பலவகைப் பொரித்த காய்கறிகளோடு பரிமாற அதனைக் கழுத்துவரை நிரம்புமாறு மன்னனுடன் அமர்ந்து உணவருந்திய மகிழ்ச்சியைக் கூறுவதாகவும் ஆற்றுப்படை நூல்களில் செய்திகள் உள்ளன.

## இல்லாளின் விருந்தோம்பல் சிறப்பு

**"தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்"**

எனும் சிறப்புச் சொற்றொடர் மூலம் தன்னிடம் உள்ள உணவு குறைவாக இருந்த போதிலும், எவ்வளவு விருந்தினர் வந்தாலும் உணவினை முறையாக உபசரிப்பவர்கள் சங்கத் தமிழ்ப் பெண்கள் என்பதனை,

**"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,**
**நீள்தொடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**
**இற்பொலி மகடூஉப் போல"**

**(புறம் - 331)**

எனும் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் தனது இல்லத்திற்கு வருபவரை வரவேற்று விருந்து உபசாரம் செய்தல் இல் லறங்களுள் ஒன்றாக கருதப்பட்டு இருந்தது. இன்றும் இவ்வழக்கம் காணப்படுகிறது. இதனை,

**"ஏனல் உழவர் வரகு மீது இட்ட**
**கான் மிருகுளவிய வன்பு சேர் இருக்கை**
**மென் திணைதுவணை முறைமுறை பகுக்கும்**
**பின்புலம் தழீஇய, புறவு அணி வைப்பும்"**

**(பதிற்று 30)**

குறிஞ்சி நிலத் தலைவி, தனது இல்லிற்கு வரும் விருந்தினருக்கு மெல்லிய திணை மாவினை அளித்து இல்லறம் செய்ததைப் பதிற்றுப்பத்து புலப்படுத்துகிறது.

## தெய்வ விருந்தோம்பல் (நேர்த்திக்கடன்)

வினையின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் இக்காலத்தில் (அயல் நாட்டிற்குச் சென்ற கணவன்) விரைவில் வரும் பொருட்டு, வரும் வழியில் தீங்கு ஏற்படாதும்

பொருட்டு, தலைவி இறைவனை வேண்டிக் கொண்டு தெய்வத்திற்கு விழா எடுத்து விருந்து பேணுகிறாள்,

***"தெய்வ விழாவும் திருத்து விருந்து அயர்வும்***
***அவ்வெள் அருவி அணிபரங் குன்றிற்கும்***
***தொய்யா விழச் சீர்வளம் தெழு வையைக்கும்***
***கொய் உளைமான் தேர்க்கொடி தேரான் கூடற்கும்***
***கை ஊழ் தடு மாற்றம் நன்று"***

***(பரி 16: 40-46)***

பிரிந்து கணவன் வந்த பின் விருந்து பேண முடியும் எனக் கருதி கணவன் இல்லம் வந்ததும் தான் வேண்டிக் கொண்ட தெய்வத்திற்கு விழா எடுத்து வரும் விருந்தினருக்கு விருந்து அளித்தலும் தலைவியின் (இல்லாள்) அறமாகக் கருதப்பட்டது என்று பரிபாடல் பறைசாற்றுகிறது.

மேலும் மணிமேகலையில் நீரும், உணவும் கொடுத்து உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உரத்த சிந்தனைக் கருத்து களும் அமைந்துள்ளன.

***"அதிற் அபய்த ஆருயிர் மருந்து"***

***மணி (பா.எண் 25:28)***

***"பசிப் பிணி மருந்து"***

***மணி(பா.எண் 17:15)***

எனும் வரிகளும் மனிதனை மனித நேயத்தோடு வாழ்வதற்கு வழிவகுத்துச் சென்றுள்ளன என்பதை அறிய முடிகிறது.

## இன்முக விருந்தோம்பல்

தமிழ் மக்களிடத்தில் அன்று வரும் விருந்தினர்களை எவ்வித முகச் சோர்வின்றியும் முகமலர்ச்சியோடும் விருந்தோம்பிய நிலையை,

**"ஒருநாள் செல்லலும் இருநாள் செல்லலும்**
**பல நாள் பயின்று பலரோடு செல்லினும்**
**தலை நாள் போன்றே விரும்பினான்**

***(புறம்: 143)***

எனும் பாடலின் மூலம் விருந்தினர்கள் எத்தனை நாட்கள் தங்கினாலும், முகமலர்ச்சியுடன் உணவளித்ததைப் புறம் பேசுகின்றது. ஆனால் இன்று "விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள்" என்ற நிலைக்கு மாறி விட்டன. மாண்பு அழிந்து விட்டன அறிவியல் உலகில் என்று நினைக்கும் போது மனம் குமுறுகின்றன.

உழவர்கள் விருந்தினரைச் சிறப்பாக ஓம்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் கோழி இறைச்சி உணவாக பயன்படுத்தப்பட்டச் சிறப்பினை,

**"வினைஞர் தந்த வெண்ணெல் வல்கி**
**மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்"**

***(பொரு 255-256)***

எனும் பாடலில் வெண்மையான சோற்றையும், அத்துடன் மனைக்கண் வாழக்கூடிய பெட்டைக் கோழிக் கறியையும் சமைத்து தாமும் உண்டு விருந்தினர்களுக்கு கொடுத்தனர். இவ்விருந்து முறை இன்றும் நாம் வீடுகளில் விருந்தினர்களுக்குச் சமைத்து கொடுத்து இன்முகத்தோடு விருந்தோம்பும் முறை காணப்படுகிறது.

## முடிவுரை

ஒரு சாண் வயிற்றுக்குத் தான் இந்த ஓட்டமும், ஆட்டமும் என்பார்கள் பெரியோர்கள் அதற்கிணங்க பசியைப் போக்கும் மாமருந்தாகவும், சங்ககால வள்ளலாகவும், அள்ள, அள்ளக் குறையாத அமுதசுரபியை வழங்கி பசி நோயைப் போக்கிய ஆண்டாளாகவும், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உயர்ந்த எண்ணத்துடன் பசி என்ற நோயை போக்குவோம்.

## துணை நின்ற நூல்கள்


1. சிறுபாணாற்றுப்படை - நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
2. பெரும்பாணாற்றுப் படை- சாரதா பதிப்கம், சென்னை
3. அகநானூறு - நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
4. நற்றிணை - கு.வெ.பாலசுப்பிரமணியம்
5. புறநானூறு - கு.வெ.பாலசுப்பிரமணியம்
6. தொல்காப்பியம் -ச.வே.சுப்பிரமணியன்